தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் – 01.04.2025**

**முன்னிலை**

# திரு முகம்மது ஷகீல் அ்ஃதர், இகாப (ஓய்வு)
# மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

## வழக்கு எண். SA 3000/SCIC/2023

திரு.P.T.மகேஸ்வரன் — மேல்முறையீட்டாளர்
த/பெ.தியாகராஜன்
எண்.1525, T.S.கிருஷ்ணா நகர்
முகப்பேர், சென்னை-600 037.

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
சார் பதிவாளர்
சார் பதிவாளர் அலுவலகம் ... பொது அதிகார அமைப்பு
அம்பத்தூர். சென்னை-600 053.

**ஆணை**

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 26/07/2022 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர்/ சார் பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், அம்பத்தூர் அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், "ரூ.100/- மதிப்புள்ள BG821418, BG821419, BG821420 வரிசை எண்கள் கொண்ட நீதிசாரா முத்திரைத்தாள் திருமதி S.R.பாண்டித்தாய் (L.No.184B97) No.4/434 மேற்கு முகப்பேர் (ஜெ,ஜெ.நகர் மேற்கு), சென்னை-600 037 என்ற முத்திரைத்தாள் முகவரால் விற்பனை செய்யப்பட்டுள்ளது. அந்த நீதி சாரா முத்திரைத்தாள் எந்த தனி நபருக்கு மற்றும் எந்த தேதியில் விற்கப்பட்டது என்றும் மேலும் முத்திரைத்தாள் முகவரால் உங்கள் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்ட விவரத்தை சான்றிட்டு வழங்கவும் " எனக் கோரியுள்ளார்.

2. பின்னர், மனுதாரர் / மேல்முறையீட்டாளர் பிரிவு 19(1)-ன் கீழ் 20/09/2022 தேதியிட்டு தனது முதல் மேல்முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார். மேல்முறையீட்டு அலுவலர்/ மாவட்டப் பதிவாளர் (நிர்), மாவட்டப் பதிவகம், (இ) குறளகம், சென்னை-104 அவர்கள் மனுதாரருக்கு கடித எண்.10099/ஆ7/2022, நாள் 22/09/2022 வாயிலாக மனுதாரர் கோரியுள்ள தகவல்களை வழங்க முத்திரைத்தாள்களின் நகல்களை வழங்கக் கோரியுள்ளார்.

3. அதன் பின்னர், மனுதாரர் / மேல்முறையீட்டாளர் 13/02/2023 தேதியிட்டு பிரிவு 19(3)-ன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். அதனைப் பெற்ற ஆணையம் SA 3000/SCIC/2023 ஆக பதிவு செய்து. மனுதாரர் கோரியுள்ள தகவல்களை வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்தின் 17/04/2023 தேதியிட்ட கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டிருந்தது. அதன் பின்னர், மனுதாரர் 30/12/2024 தேதியிட்டு ஆணையத்திற்கு ஆட்சேபணை கடிதம் அனுப்பியுள்ளார்.

4. இந்நிலையில், இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீது நேரடி விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு 01/04/2025 அன்று நடைபெறும் தமிழ்நாடு தகவல் ஆணைய விசாரணைக்கு ஆஜராகுமாறு மனுதாரருக்கும், பொதுத் தகவல் அலுவலருக்கும் ஆணையத்தால் விசாரணை அறிவிப்பு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

**5.** இன்றைய விசாரணைக்கு, மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திரு.M.ஜாபர்சாதிக், சார் பதிவாளர் (பொறுப்பு), அம்பத்தூர் சார்பதிவகம் அவர்கள் ஆஜராகி மனுதாரரின் மனுவை பிரிவு 6(3)-ன் கீழ் மாற்றம் செய்து 02/08/2022 தேதியிட்டு சார்பதிவாளர், கொன்னூர் அவர்களுக்கு அனுப்பியதோடு, மனுதாரருக்கும் அக்கடிதத்தின் நகல் அனுப்பப்பட்டுள்ளதாகவும் பின்னர் 22/09/2022 தேதியிட்டு பதிலும் அதன் பின்னர் 19/10/2022 தேதியிட்டு பதிலும், அதன் பின்னர் இறுதியாக 21/11/2024 மற்றும் 25/11/2024 தேதிகளிட்ட கடிதங்களின் வாயிலாக தகவல்களும் அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார்.

6. ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில் மனுதாரர், தனது 26/07/2022 தேதியிட்ட பிரிவு 6(1)-ன் கீழான மனுவில் சில எண்களைக் குறிப்பிட்டு எந்த தேதியில், யாருக்கு அந்தக் குறிப்பிட்ட முத்திரைத்தாள்கள் விற்கப்பட்டன எனக் கோரியுள்ளார். அதன் பின்னர், பொதுத் தகவல் அலுவலர் /மாவட்டப் பதிவாளர், (நிர்), மாவட்டப் பதிவகம், (இ) குறளகம், சென்னை-104 அவர்கள் 22/09/2022 தேதியிட்டு அனுப்பியுள்ள பதிலில், மனுதாரரை, குறிப்பிட்ட முத்திரைத் தாள்களின் நகல்களை வழங்கக் கோரியுள்ளார். அவற்றை 17/10/2022 தேதியிட்ட மனுவின் மூலம் மனுதாரர் அனுப்பியுள்ளார். அவற்றைப் பெற்ற பொதுத் தகவல் அலுவலர் /மாவட்டப் பதிவாளர் 19/10/2022 தேதியிட்டு மனுதாரருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் எந்த வருடத்தில் குறிப்பிட்ட முத்திரைத் தாள்கள் விற்கப்பட்டன என்ற விவரத்தை வழங்கக் கேட்டுள்ளார். மனுதாரரும் 31/10/2022 தேதியிட்டு மாவட்டப் பதிவாளருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் 2017ம் வருடம் குறிப்பிட்ட முத்திரைத் தாள்கள் விற்கப்பட்டுள்ளதாக தகவல் தெரிவித்துள்ளார். அதற்குப் பின்னரும், மாவட்டப் பதிவாளர். (நிர்), மாவட்டப் பதிவகம், (இ) குறளகம், சென்னை-104 அவர்கள் எவ்வித தகவலையும் மனுதாரருக்கு வழங்கவில்லை.

7. மேலும், இன்றைய விசாரணையின் போது, பொதுத் தகவல் அலுவலர்/ சார் பதிவாளர், அம்பத்தூர் அவர்கள் தெரிவிக்கையில் மாவட்டப் பதிவாளரின் அறிவுறுத்தலின் பேரில் மனுதாரருக்கு 21/11/2024 மற்றும் 25/11/2024 தேதியிட்டு அனுப்பிய கடிதத்தில், மனுதாரர் கோரிய தகவல்கள், தமது அலுவலகத்தில் பராமரிக்கப்படவில்லை என்ற பதிலை அனுப்பியதாகக் கூறினார். இன்றும், அதே பதிலை வலியுறுத்திக் கூறியதோடு, மனுதாரர் கோரியுள்ள தகவல் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில்தான் பராமரிக்கப்படுகிறது எனக் கூடுதலாகத் தெரிவித்தார்.

**எனவே, மாவட்டப் பதிவாளர், வடசென்னை பதிவு மாவட்டம், சென்னை அவர்கள் மனுதாரருக்கு அளித்த பதிலை ஆணையம் ஏற்கவில்லை. மாவட்டப் பதிவாளர், வடசென்னை பதிவு மாவட்டம், சென்னை அவர்கள்**

**சார்பதிவாளர், அம்பத்தூர் அவர்களிடம் எவ்வித விவரத்தையும் கேட்க வேண்டிய முகாந்திரமும் இல்லை. எனவே, இவ்வழக்கு பிறிதொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது. அடுத்த விசாரணைக்கு மனுதாரர், மாவட்டப் பதிவாளர், வடசென்னை பதிவு மாவட்டம், (இ) குறளகம், சென்னை-104, பொதுத் தகவல் அலுவலர்/ சார்பதிவாளர், அம்பத்தூர் ஆகியோருக்கு அழைப்பாணை அனுப்பப்பட வேண்டும். விசாரணையின் போது மாவட்டப் பதிவாளர் (நிர்), வடசென்னை பதிவு மாவட்டம், (இ) குறளகம், சென்னை-104 அவர்கள் இவ்வழக்கின் தொடர்புடைய அனைத்து பதிவேடுகளையும் கொண்டு வர வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.**

**ஒம்./-(முகம்மது ஷகீல் அ்தர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 3000/SCIC/2023</u>**

**பெறுநர்**

**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
சார் பதிவாளர்
சார் பதிவாளர் அலுவலகம்
அம்பத்தூர். சென்னை-600 053.

2. பொதுத் தகவல் அலுவலர் /
மாவட்டப் பதிவாளர் (நிர்)
மாவட்டப் பதிவகம், வட சென்னை
(இ) குறளகம், சென்னை-600 104.

**மேல்முறையீட்டாளர்**

திரு.P.T.மகேஸ்வரன்
த/பெ.தியாகராஜன்
எண்.1525, T.S.கிருஷ்ணா நகர்
முகப்பேர், சென்னை-600 037.

RG/PC